# விவாஹம்

**தொகுத்தவர்: ராமகிருஷ்ணன்** **கைப்பேசி: 8884334140**

## முன்னுரை:

நம்முடைய ஸநாதன தர்மத்தில் விவாஹம் என்பது ஒரு புனிதமான சிறப்பான ஸம்ஸ்காரம். நமக்கு விதிக்கப்பட்டுள்ள 40 ஸம்ஸ்காரங்களில் இதுவும் ஒன்று. இல்லற வாழ்க்கை நடத்த ஒருவன் அக்னி சித்தியை அடைவதற்கு இதுவே மூலமாகிறது. ஔபாஸன அக்னியின் மூலமாகச் செய்யப்படும் கர்மாக்களினால் மட்டுமே தேவர்களும் பித்ருக்களும் திருப்தி அடைகின்றனர். இல்லற வாழ்க்கையை சரிவர நடத்த ஒரு பெண்ணை மணம் செய்து கொள்ள வேண்டும். இதேபோல், ஒரு பெண்ணுக்கும் விவாஹம் அவசியமாகிறது. இதன் மூலமே அவள் ஸமூகத்தில் ஒரு மதிப்பிற்குரிய ஸுமங்கலி என்ற ஸ்தானத்தைப் பெறுகிறாள். ஆகவே, ஆண் பெண் இருவருக்கும் விவாஹம் ஒரு சிறந்த ஸம்ஸ்காரமாகிறது. **இன்றைய தினத்தில் விவாஹத்தில் எதற்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமோ அதற்கு முக்கியத்துவம் கொடுப்பதில்லை**. நிறைய திரவியம் செலவழித்தும் பல விவாஹங்கள் நடந்தும், விவாஹத்திற்கு பிறகு சந்தோஷமான வாழ்க்கை இல்லாமலும், மன உளைச்சலுடனும் வாழ்கை நடந்து வருகிறது. காரணம் என்ன? **நாம் நம்முடைய சாஸ்திரீய விவாஹத்தை விட்டதுதான்.**

## விவாஹத்தில் கூறப்படும் மந்திரங்கள்:

விவாஹத்தில் கூறப்படும் மந்திரங்கள் எல்லாம் கணவனும் மனைவியும் என்னென்ன கோரிக்கைகளை வேண்டுகின்றனரோ, எவ்விதம் நல்ல மண வாழ்க்கை அமைய வேண்டுமென நினைப்பார்களோ, அவை யாவற்றையும் சுட்டிக்காட்டுகின்ற அளவில் அழகாக அமைந்துள்ளன. இதன் பொருளை அறிந்து நல்ல முஹூர்த்தத்தில் அக்நி முன்பாகவும், வேத பிராம்மணர்களின் நடுவிலும் ச்ரத்தையுடனும் மந்தரங்களை விடாமல் சொல்லிச் செய்தால் வாவாஹம் தம்பதிகளுக்கு நல் இல்லற வாழ்வை அளித்து நல்ல பலன்களைக் கொடுக்கும்.

## விவாஹத்திற்கு முன்:

பொதுவாக மந்திரத்தின் பொருள் தெரியாவிட்டாலும், மந்திரத்தை திருப்பி சரியாக சொன்னால் பலன் கிடைக்கும். விவாஹத்திற்கு எத்தனையோ முன்னேற்பாடுகள் செய்கிறோம். ஆனால், வைதிக கர்மாவிற்கு எந்த முன்னேற்பாடு செய்வதில்லை. இதுதான் பெரிய இடைவெளியை ஏற்படுத்துகிறது.

## சரி செய்யும் முறை:

- திருமணத்திற்கு உரிய வயதை அடைந்த ஆண்களும், பெண்களும் ஆத்து சாஸ்திரிகள் மூலமாகவோ அல்லது வேறு சாஸ்திரிகள் மூலமாகவோ அல்லது அகத்தில் இருக்கும் பெரியோர்கள் மூலமாகவோ, திருமண நிகழ்ச்சிகளைப் பற்றியும், அதன் விபரங்களையும் அறிந்து கொள்ள வேண்டும்.

- விவாஹத்திற்கு உரிய மந்திரங்களை சாஸ்திரிகள் மூலமாக கேட்டு, திரும்ப சொல்லி விவாஹத்தின் போது மந்திரங்களை சரியாகச் சொல்ல கற்றுக் கொள்ள வேண்டும்.

- ஆத்து ஸம்பிராதாயங்களை கேட்டறிந்து தெரிந்து கொள்ள வேண்டும். விவாஹத்தில் வேண்டாத விஷயங்களுக்கு செலவிடும் பணத்தை மந்திரங்களை சரியாகச் சொல்ல சாஸ்திரிகளுக்கு தக்ஷிணை கொடுத்துக் கற்றுக் கொள்வது நல்லது.

**எட்டு வகை விவாஹங்கள்:**

1. **பிராஹ்மம்:-** வேதமறிந்து நற்குணமுள்ள ஒரு வரனுக்கு கன்னிகையை அலங்கரித்து தானம் செய்வது பிராஹ்ம விவாஹம் எனப்படும். இதுதான் நடைமுறையில் உள்ளது.

2. **தெய்வம்:-** யக்ஞத்தில் ஒரு ரிக்வித்தாக உள்ளவருக்கு கன்னிகையை அலங்கரித்து தக்ஷிணையாகக் கொடுத்து விவாஹம் செய்வது தெய்வ விவாஹம் எனப்படும்.

3. **ஆர்ஷம்:-** வரனிடமிருந்து ஒன்று அல்லது இரண்டு பசுக்களை வாகிக் கொண்டு கன்னிகையை விவாஹம் செய்து வைப்பது ஆர்ஷம் எனப்படும்.

4. **ப்ராஜாபத்யம்:-** இருவரையும் தர்மம் செய்யுங்கள் என்று கூறி விவாஹம் செய்வது ப்ராஜாபத்யம் எனப்படும்.

**இந்த நான்கு வகையில் ஒன்றை பிராம்ணன் அனுஷ்டிக்கலாம்**. இன்றைய நடைமுறையில் பிராஹ்ம விவாஹம் தான் உள்ளது. இந்த பிராஹ்ம விவாஹத்தால் ஒருவனுடைய தலைமுறைகளை பாவத்திலிருந்து விடுவித்து நன்மை செய்கிறாள்.

5. **ஆஸுரம்:-** கன்னிகையை சார்ந்தவர்களுக்கு சக்திக்கு அதிகமாக பணம் கொடுத்து விவாஹம் செய்வது ஆஸுரம் எனப்படும்.

6. **காந்தர்வம்:-** ஆணும் பெண்ணும் இச்சையால் ஒன்று சேர்ந்து, பிறகு விவாஹம் செய்து கொள்வது காந்தர்வம். இது க்ஷத்திரியர்களுக்கேற்றது. இது தர்மமில்லை.

7. **ராக்ஷஸம்:-** அடித்து, உதைத்து அழ, அழத்தூக்கி சென்று விவாஹம் செய்வதூ ராக்ஷஸம்.

8. **பைஸாஸம்:-** ஏமாந்த போதோ அல்லது தூங்கும் போதோ ஏகாந்தமாகக் கூடி விவாஹம் செய்து கொள்வது பைஸாஸம் எனப்படும்.

   இந்த நான்கு விவாஹங்களும் தர்மத்திற்கு விரோதமானது. **இந்த கடைசி நான்கு விவாஹங்களையும் தவிர்க்க வேண்டும்.**

### வதுவைத் தேடுதல்:

(வது=பெண். வரன்=ஆண்) - குருகுல வாஸமிருந்து படிப்பு (வேத அத்யயனம்) முடித்த வரனுக்கு, விரதம் செய்து (படிப்பை முடிப்பதற்கான கர்மா) குருவே அவனுக்குத் தகுந்த பெண்ணை, மாணவனின் நண்பர்களை அனுப்பி கன்னியைத் தேடுவதாகும். அல்லது பெற்றோர்களே வரன் அல்லது வதூவைத் தேடுவதாகும். நாம் தேடும் வரனும்,வதூவும் ஒரே கோத்திரமாக இருக்கக்கூடாது. அப்படி இருந்தால் வரனும் வதூவும் கோத்திர தாயாதி (சகோதர, சகோதரி) ஆவார்கள். சகோதர, சகோதரிக்கு திருமணம் செய்யக்கூடாது.

### ஸக கோத்திரத்தில் விவாஹம்:

ஒரே கோத்திரத்தில் விவாஹம் செய்து கொள்வது அந்த தம்பதிக்கும், குடும்பத்திற்கும் மிகவும் துன்பத்தைத் தரும். அந்த தம்பதிகளுக்கு பிறக்கும் குழந்தை சண்டாளன் ஆவான். இது மட்டுமல்ல. அப்பா வழியில் ஏழு தலைமுறைக்கும், அம்மா வழியில் ஐந்து தலைமுறைக்கும் விவாஹம் செய்துக் கொள்ளக்கூடாது என்று தர்ம சாஸ்திரம் வலியுறுத்துகிறது. இன்றைய நவீன விஞ்ஞானமும் ரத்த சம்மந்தமான உறவு முறையில் விவாஹம் கூடாது என்கிறது. இதைத்தான், நமது சாஸ்திரங்கள் அந்தக் காலத்திலேயே கூறியது.

### விவாஹம் செய்து கொள்வதை மறுப்பது/தாமதப்படுத்துவது:

சாஸ்த்திரப்படி விவாஹம் செய்து கொண்டு, குழந்தைகளைப் பெற்றுக் கொண்டால்தான், பித்ருக்களின் கடனிலிருந்து விடுபட முடியும். விவாஹம் செய்து கொள்ளாதவர்களைப் பார்த்து, பித்ருக்கள் இவனைப் பார்த்து இவனுக்குப் பிறகு யார் நமக்கு தர்ப்பண, ஸ்ரார்த்தங்களைத் செய்து எள்ளும், நீரும் விடுவார்கள் என்று ஏக்கத்துடனும், வருத்தத்துடனும் பார்ப்பார்களாம். ஸந்நியாசிகளும், பிரம்மசாரிகளும் தனக்குத் தானே சமைத்துக் கொள்ள அதிகாரம் கிடையாது. விவாஹம் செய்து கொண்டு கிரஹஸ்தர்களாக இருப்பவர்களே இவர்களுக்கு பிக்ஷை போட வேண்டும். இவர்கள் மூலமாகத்தான் ஸந்யாசிகளுக்கும், பிரம்மசாரிகளுக்கும் ஆஹாரம் கிடைக்கிறது. விவாஹம் செய்து கொள்ளாமல் நைஷ்டிக பிரம்மசாரியாக இருப்பதற்கு கலியுகத்தில்

சாஸ்திரங்களால் தடுக்கப்பட்டு உள்ளது . **(இப்போது விவாஹம் ஆகாமல் இருப்பவர்களெல்லாம் நைஷ்டிக பிரம்மசாரி இல்லை**).விவாஹம் என்பது சுகத்தை அனுபவிக்க மட்டும் அல்ல, தர்மத்தை கடைபிடித்து, இல்லற வாழ்க்கையை நடத்துவதற்காகத்தான்.

### வாக்தானம் (நிச்சயதார்த்தம்) ஆன பிறகு விவாஹம் தாமதம் ஆனால்:

கீழ்கண்ட காரணங்களால் விவாஹம் தாமதம் ஏற்பட வாய்ப்புகள் உண்டு.

1) வரன்/வதூ வீட்டில் விவாஹம் செய்து கொள்ள தாமதிக்கிறார்கள்.

2) வரன்/வதூ வெளிநாட்டில் இருக்கிறார்கள். இன்னும் வரவில்லை.

3) வாக்தானம் ஆகி 3 ருதுக்கள் (6 மாதங்கள்) ஆகிவிட்டது. இன்னும் விவாஹத்திற்கு தயாராகவில்லை.

**இந்த காரணங்களில் ஏதாவது ஒன்றின் காரணமாக விவாஹம் தடைப்பட்டால், வேறு இடத்தில் திருமணம் செய்யலாம்**.

மணப்பெண்ணுக்கு மணகன் வீட்டிலிருந்து, வாக்தான சமயத்தில் நகைகள், புடவைகள், ஆபரணங்கள் பெறப்பட்டிருந்தால், ஒரு வருடம் வரை காத்திருக்க வேண்டும். அப்படி ஒரு வருடத்திற்கு மேல் ஆகி விட்டால் வேறு இடத்தில் நிச்சயம் செய்யலாம். வாக்தானம் ஆன பிறகு, குலத்தில் சுத்தியின்மை, ஒழுக்கக் குறைவு, தீராத வியாதிகள், முன்பே இன்னொருவருக்கு நிச்சியக்கப்பட்டிருப்பது தெரிய வந்தால், அதைத் தவிர்த்து விட்டு வேறு ஒருவரைத் தேர்ந்தெடுக்கலாம். **எந்த தோஷமும் இல்லாத சமயத்தில் வாக்தானம் செய்து விட்டு, விவாஹம் செய்யாமல் இருப்பது மிகத் தவறு.**

### ஸமாவர்த்தனம்:

ஸமாவர்த்தனம் என்ற இந்த நிகழ்ச்சி, இதுவரை பிரம்மசாரியாக வாழ்ந்து வந்த ஒரு பையன், தனது முன்னோர்களை நாந்தீ என்னும் கர்மா மூலம் திருப்தி செய்வித்து, அவர்கள் அனுகிரஹத்துடன் தான் மேற்க்கொண்ட நல்ல காரியம் நன்கு நடைபெற வேண்டும் என்ற நோக்கத்துடன் செய்யப்படும் ஒரு சுபகாரியம். இத்துடன் விரதம், ஸமாவர்த்தனம் முதலியவற்றை செய்து கொண்டு தன்னை விவாஹத்திற்கு தகுதிப்படுத்திக் கொள்கிறான். இது வரனுடைய வீட்டில், அவர்களுடைய திரவிய செலவில், விவாஹத்திற்கு முதல் நாளோ அல்லது அன்றோ செய்யப்பட வேண்டிய நிகழ்ச்சி. இதை விவாஹ மண்டபத்தில் செய்வது அவ்வளவு உசிதம் இல்லை. அப்படி வேறு வழியில்லாமல் செய்யும், வரனுடைய வீட்டுத் திரவியத்திலிருந்து செலவழித்து செய்ய வேண்டும். வதூவின் திரவியத்தை உபயோகப்படுத்தக்கூடாது. இன்றைய நிலை:- மண்டபத்தில், வதூவினுடைய திரவியத்தில் இந்த கர்மாவை செய்து கொண்டு வருகிறோம்.

விவாஹத்தினுடைய முதல் நிகழ்ச்சியே பல இடங்களில் இவ்வாறு தவறாக ஆரம்பிக்கப்படுகிறது.

(**இந்தக் குழுவில் இருப்பவர்களின் வரனுக்கு இதன் பிறகு விவாஹம் நடப்பதாக இருந்தால், தங்கள் ஆத்து வாத்யாரிடம் பேசி, வரனிற்கும் இதைப் புரிய வைத்து, இந்த கர்மாவை சரியாக செய்து முன்னோர்களின் ஆசியைப் பெற விரும்புகிறேன்**).

### யாத்ராதானம்:

சாஸ்த்திரப்படி பிராஹ்மணன் எந்த ஆஸ்ரமுமில்லாமல் இருக்கக்கூடாது. ஆகையால், ஸமாவர்த்தனம் ஆன வரன் கிருஹாஸ்தாரமத்திற்குள் செல்ல, அதற்குரிய அலங்காரங்களுடனும், நண்பர்களுனும் புனித க்ஷேத்தரங்களுக்கு யாத்திரை செல்லக் கிளம்புகிறான். அதைப் பார்த்த பெண்ணின் தந்தை, வரனை அழைத்து தனது பெண்ணை தானம் தருவதாகக் கூறுகிறார். வரனை அழைத்து பெண்ணை தானம் கொடுக்கிறார்/கொடுக்க வேண்டும். **தானம் வாங்கிக் கொண்ட பிறகுதான் வரன் வது இருவரையும் சேர்த்து உட்கார வைக்க வேண்டும். யாத்ராதானத்திலிருந்து நேராக ஊஞ்சலில் உட்கார வைக்கக்கூடாது.**

### கன்னிகாதானம்

பொதுவாக தானம் கொடுப்பவர் நின்று கொண்டு தானம் வாங்க வேண்டும். தானம் வாங்கிக் கொள்பவர் உட்கார்ந்து கொண்டுதான் வாங்கிக் கொள்ள வேண்டும். ஆனால், கோதானமும் (பசு), கன்யாதானம் இவை இரண்டு மட்டும் நின்று கொண்டுதான் வாங்கிக் கொள்ள வேண்டும். அதன்படி பெண்ணின் தகப்பனார் அல்லது பெண்ணை தானம் செய்பவர் பெண்ணோடு தம்பதிகளாக கிழக்கு முகமாக நின்று கொண்டும், வரன் மேற்கு முகமாக நின்று கொண்டும் கன்யாதானம் செய்ய வேண்டும். *பெண்ணை அப்பா மடியில் உட்கார வைத்து தானம் கொடுப்பது சாஸ்த்திரத்தில் இல்லை.*அதேபோல தானம் செய்யும் பொருளோடு தக்ஷிணையும் சேர்த்துக் கொடுக்க வேண்டும். அதன்படி கன்னிகையோடு ஸ்வர்ணத்தையும் சேர்த்து தானமாகக் கொடுக்க வேண்டும். அந்த ஸ்வர்ணத்தை (தக்ஷிணையை) வரனிடம் கொடுக்க வேண்டும். தற்போது, அதை விவாஹம் செய்து வைக்கும் வைதீகர்கள் எடுத்துக் கொள்கிறார்கள். இது தவறு.

கன்னிகாதானம் முடிந்த பின்பு வரனானவன் தானம் வாங்கிய பெண்ணுக்கு புதிய வஸ்த்திரத்தை (முஹூர்த்தப் புடவையை) கொடுக்க வேண்டும். ஆனால், தற்போது யாத்ராதானம் முடிந்தவுடன், கன்னிகையை மந்திரபூர்வமாக தானம் கொடுக்காமல் வரன், வது இருவரையும் சேர்த்துக் கை கோர்த்து உட்கார வைத்து ஊஞ்சல் ஆட வைக்கிறார்கள். இது சாஸ்திர விரோதம். தானமே வாங்கிக் கொள்ளாமல் வரன் எப்படி வதுவின் கையைப் பிடிக்க முடியும்? (யோசித்துப் பாருங்கள். பொருள் புரியும்)

(மாலை மாற்றுதல்)-- நாம் செய்யும் விவாஹத்தில் மாலை மாற்றுதல் என்ற ஒரு நிகழ்ச்சியை செய்து வருகிறோம். இது புராணங்களில் இருந்து எடுக்கப்பட்ட ஒரு நிகழ்ச்சி. இதை ஸம்பிரதாயமாகச் செய்து வருகிறார்கள். பழங்காலத்தில், வது/வரன் குழந்தையாக இருக்கும் போதே (அதாவது பெண் பெரியவள் ஆகும் முன்பே) விவாஹம் செய்தார்கள். தற்போது சட்டம் வந்து 21/18 வயதுக்கு மேல் தான் விவாஹம் செய்ய வேண்டும் என்றனர். தற்போது இதன் இரண்டு வயதில் விவாஹம் நடைபெறுகிறது. பால்யத்தில் விவாஹம் நடந்த போது அந்த குழந்தைகளை உற்சாகப்படுத்த மாலை மாற்றல் என்று செய்தார்கள். இந்த மாலை மாற்றலின் போது பையனை, பையனினன் மாமாவும், பெண்ணை, பெண்ணின் மாமாவும் தோளில் தூக்க வேண்டும் என்று தோளில் தூக்குகிறார்கள். இது சாஸ்திர விரோதமானது. பெண் ருது ஆவதற்கு முன் குழந்தை. ருது ஆன பிறகு அவள் கன்னிகை எனப்படுகிறாள். கன்னிப் பெண்ணைத் தொடுவதற்கு யாருக்கும் அதிகாரம் இல்லை. இது தவறு. இதைத் தவிர்க்க வேண்டும். கோவிலில் ஸ்வாமிக்கு செய்வது போல் மாலை மாற்றுதல், ஊஞ்சல் இவைகளை விவாஹம் ஆனபிறகு செய்ய வேண்டும். அதற்கு முன் செய்யக்கூடாது.

எந்த ஒரு கர்மாவை செய்யும் போதும் ஸங்கல்பம் செய்து கொண்டதிலிருந்து, அந்த கர்மா முடியும் வரை பேசக்கூடாது. விவாஹத்தில் பாணிக்கிரஹணம் முடிந்து மங்கள ஹாரத்தி எடுக்கும் வரனும், வதுவும் பேசச்கூடாது. மாங்கல்யதாரணம் புராணத்திலிருந்து எடுக்கப்பட்டு ஸம்பிரதாயதினால் செய்து வருகிறோம். இது சாஸ்திர விரோதமில்லை. அதனால்தான் செய்கிறோம். பாணிக்கிரஹணம் என்பது கைப்பிடித்தல் என்று பொருள். இதன் அடிப்படையில் மந்திர பூர்வமாக வது, வரன் கையைதான் பிடிக்க வேண்டும். இப்பொழுதெல்லாம் இருவருக்கும் அவரவர்களுடைய உறவினர்கள், நண்பர்கள், பிற ஜாதியினர் கை குலுக்கி வாழ்த்துகிறார்கள். சாஸ்திர பூர்வமாக இது மிகப் பெரிய தவறு.

### காரணம்:

- விவாஹ ஸங்கல்பம் செய்து கொண்டு உள்ளோம்.
- ஸாநாதன தர்மப்படி வது, வரன் இவர்கள்தான் ஒருவர் கையை ஒருவர் பிடித்துக் கொள்ளலாம்.
- நமது பண்பாடு வேறு யாராக இருந்தாலும் அவர்களுக்கு கைகூப்பித் தான் வணங்க வேண்டும்.

பெண்ணுக்கு ஒருமுறைதான் விவாஹம் என்பதால், ஒருமுறைதான் மாங்கல்யதாரணம். **ஆகையால், ஷஷ்டியப்தபூர்த்தி, சதாபிஷேகம் இவைகளில் பிராம்ணர்களுக்கு மாங்கல்யதாரணம் கிடையாது.** பிராமணர்கள் அல்லாதவர்கள் விஷயம் வேறு.

## விவாஹத்தின் பொதுவான சில குறிப்புகள்:

1. பிராஹ்ம்ம விவாஹம் வைதிகர்களை வைத்துக் கொண்டு நடத்த வேண்டும்.

2. வைதிக கர்மாக்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து செய்யும் பொழுது பொருட் செலவு அதிகம் ஆகாது.

3. முறையாக விவாஹ ஹோமத்தை செய்துசெய்து, வைதிக அக்னியை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

4. ஒரே நாளில் விவாஹத்தைச் செய்து முடிக்கக் கூடாது.

5. எல்லா கர்மாக்களையும் பூமியில்தான் செய்ய வேண்டும்.

6. விவாஹத்தை செய்யும் முன்பே, இதை பூமியில் நடத்திட சரியான இடம் பார்த்துக் கொள்ள வேண்டும்.

7. அவரவர் வேதத்தின் அதிதேவதை அஸ்தமனத்தின் போது சுப கர்மாக்களை நடத்தக்கூடாது.

8. வைதிகர் சொல்லி வைக்கும் மந்திரத்தை சரியாகக் கேட்டு சிரத்தையுடன் திருப்பிச் சொல்ல வேண்டும்.

9. விவாஹ கர்மாக்கள் பூர்த்தியாகும் வரை வதும், வரனும் யாருடனும் பேசக்கூடாது.

10. ருதூ சாந்தியை ஒரு போதும் விவாஹத்தன்றே செய்யக்கூடாது.

11. வைதிக விவாஹத்திற்கு எல்லோரும்  ஒத்துழைக்க வேண்டும்.

12. வெளிநாடு சென்றுவிட்டு வந்து இங்கு விவாஹம் செய்து கொண்டு மறுபடியும் வெளிநாடு செல்பவர்களுக்கு நம் வைதிக ஆசாரப்படி விவாஹம் செய்து வைத்தும் உபயோகமில்லை.

13. சாஸ்திர முறைப்படி செய்யாத விவாஹம், விவாஹம் ஆகாது.

14. பொதுவாக, பிராமணர்கள் இதர பேர்கள் சாப்பிட்ட மீதத்தையும், மூன்று மணி நேரத்திற்கு மேல் ஆன உணவுப் பொருட்களையும் சாப்பிடக்கூடாது. இது முக்கியமாக நாம் கர்மாக்களை செய்யும் போதாவது அனுஷ்டிக்க வேண்டும்.

## திருமாங்கல்ய தாரணம்:

வரன் வதுவின் கழுத்தில் விவாஹ சின்னமாகிய திருமாங்கல்யத்தை நல்ல முஹூர்த்தத்தில் அணிவிக்கிறான். அதற்குரிய ஸ்லோகம் :- **"மாங்கல்யம் தந்துநாநேந பர்த்ருஜீவந ஹேதுநா| கண்டே பத்நாமி ஸுபகே ஸாஜீவ சரதாம் சதம்||"** இதன் பொருள்- **பர்தாவின் இல்லற வாழ்க்கைக்கு ஹேதுவான இம்மங்கள அணியை உனது கழுத்தில் அணிவிப்பதின் மூலம் நல்லவளாகிய நீ நூறு ஆண்டுகள் ஸுமங்கலியாக என்னுடன் வாழ வேண்டும்** என்பதாகும். பிறகு தான் பெற்றுக்கொண்ட இக்கன்னிகையின் இடுப்பைச் சுற்றி தர்பையினால் ஆன கயிற்றை வரன் 'ஆசாஸாநா' என்ற மந்திரம் சொல்லிக் கட்டுகிறான். பிரம்மசாரிக்கு உபநயன காலத்தில் எப்படியோ அவ்விதம் பெண்ணுக்கு விவாஹ ஸம்ஸ்காரத்தில் இந்த கர்மாக்கள் ஏற்பட்டிருக்கலாம். ஸகல பாக்கியங்களையும் பெற்று, தீர்க்க ஸுமங்கலியாக கணவனுடன் நீண்ட காலம் வாழ வேண்டும் எனவும், சரீர ஆரோக்யத்தையும் நல்ல ஸந்தானங்களையும் அடைய வேண்டும் என்று பெண்ணின் மனத்தில் தோன்றும் எண்ணங்களையும் இம்மந்திரம் அறிவிக்கிறது. இவை விவாஹத்தின் பூர்வாங்க கர்மாக்கள்.

### விவாஹ கர்மா:

'பூஷா த்வேதோ நயது', என்ற மந்திரம் கூறி வதூவின் வலது கரம் பற்றி அழைத்து வந்து அதன் பின் மேற்குப்புறம் விரிக்கப்பட்ட புதுப்பாயின் மீது வரன் தனது வலது புறத்தில் மணப்பெண்ணை அமர்த்தி தானும் அமர்கிறான். இம் மந்திரம் மூலம் விவாஹமான பிறகு வது தனது வீட்டின் தலைவி ஆகிறாள் என்று பெருமை வெளியிடப்படுகிறது. பிறகு ஸோமன்-கந்தர்வன்-அக்னி இம்மூவரையும் 'ஸோம: ப்ரதமோ: ஸோமோ ऽ ததத்' என்ற மந்திரங்களினால் வரன் பிரார்த்திக்கின்றான். ஸோமன் காந்தியையும், கந்தர்வன் அழகையும் குரலையும், அக்னி தனத்தையும் புத்ர ஸம்பத்தையும் கொடுத்து தங்களைக் காப்பாற்ற வேண்டும் என்பது கருத்து.

இது விவாஹத்தின் ஐந்து அங்கங்களில் ஒன்றாகும். இதுவும் ஸப்தபதீ என்று வரும் அடுத்த கர்மாவும் குறிப்பாக விவாஹத்திற்கு நிச்சியக்கப்பட்ட முகூர்த்தத்திலேயே நடக்க வேண்டும். "க்ருணாமிதே", முதலிய மந்திரத்தை சொல்லி வரன் கவிழ்க்கப்பட்ட தன்னுடைய வலது கையினால் நிமிர்ந்துள்ள வதுவின் வலது கையைப் பிடிக்க வேண்டும். பெண் பிரஜை வேண்டுமானால் கட்டை விரலைத் தவிர மற்ற விரல்களைப் பிடிப்பது-- ஆண் பிரஜையே வேண்டுமானால் கன்னிகையின் கட்டை விரலைப் பிடிப்பது என்று ஸுத்திரம் கூறுகிறது. இம்மந்திரங்கள் மூலம் மணம் செய்து கொண்ட ஸ்த்ரீ புருஷர் நட்புக் கொண்டவர்களாக ஒற்றுமையுடன் நீண்ட காலம் பிரியாமல் இருக்க வேண்டும் என்றும், அக்னி -ஸுர்யன்-அர்யமா-பகன் முதலிய தேவதைகள் தங்களை ரக்ஷிக்க வேண்டும் என்றும் இல்லற வாழ்விற்கு அடிப்படையான தம்பதிகளின் மன ஒற்றுமையை வழங்கி வளர்த்து அருள வேண்டுமெனவும் வேண்டப்படுகிறது.

## ஸப்த பதீ:

இதுவே விவாஹத்தில் முக்கியமான அங்கமாகும். அக்நிக்கு வடக்காகவோ/மேற்காகவோ கன்னிகையை நிறுத்தி அவளது காலைப் பிடித்து அவளை ஏழு அடிகள் எடுத்து வைக்கச் செய்ய வேண்டும். இவ்விடம், 'ஏகமிஷே', என்னும் மந்திரங்கள் கூறப்படுவதால் செய்யப்படும் பிராத்தனையானது முதல் அடி எடுத்து வைப்பதால் நமது வீட்டில் அன்னம் குறைவற கிடைக்க வேண்டுமெனவும், இரண்டாவது அடி வைப்பதால் நமக்கு உடல் வலிமை குன்றாமல் இருக்க வேண்டுமெனவும், மூன்றாவது அடி வைப்பதால் நாம் விரத அனுஷ்டானங்களை செவ்வனே செய்வோம் என்றும், நான்காவது அடி வைப்பதால் நமக்கு தாம்பத்ய வாழ்வின் முக்கிய ஸுகங்களை நன்கு அடைய வேண்டுமெனவும், ஐந்தாவது அடியை வைப்பதால் நமது வீட்டில் உள்ள மாடு கன்றுகள் குறைவின்றி வாழ்ந்து உதவவும், ஆறாவது அடி வைப்பதால் அந்தந்த ருதுக்களில் உண்டாகும் தான்யம்.-பழங்கள் -புஷ்பங்கள் இவை தடையின்றி கிடைக்க வேண்டும் எனவூம், ஏழாவது அடி வைப்பதால் நம் வீட்டிற்கு வரும் அதிதிகளை நல்ல முறையில் உபசரிக்கும் ஆற்றல்/திறன் வேண்டும் எனவும் - இவற்றை அருள விஷ்ணு நம்முடன் வந்து அருள வேண்டும் என்பதாகும். இவ்விதம் ஏழு அடிகளை கணவனுடன் கூட எடுத்து வைத்தப் பிறகு, மணப்பெண்ணை நோக்கி வரன், " ஸகா ஸப்த பதா" என்ற மந்திரத்தைக் கூறி விளக்குகிறான்--என்னுடன் ஏழு அடிகளை எடுத்து வைத்ததனால் நீ என் சிநேகிதி ஆகி விட்டாய். நமது நட்பு மேலும் வளர்ந்து பிரிக்கப்படதாதக இருக்க வேண்டும். நாம் செய்யும் ஒவ்வொரு காரியத்தையும் ஒன்றாகவே தீர்மானிப்போம். ஒன்று சேர்ந்து பிரியமுடையவர்களாகவும் ஒத்த மனதையுடையவர்களாகவும் உணவையும் பலத்தையும் ஸுகங்களையும் சேர்ந்தே அனுபவிப்பவர்களாகவும் ஒரே கருத்தை வெளியிடுபவர்களாகவும், இருவருக்கும் பொதுவான விருப்பங்களையுடையவர்களாகவும் இன்சொல்லே பேசுபவர்களாகவும் அனுஸரித்து நடப்பவர்களாகவும் இருக்க வேண்டுமென விஷ்ணு முதலிய தேவதைகள் அருள்புரிவார்களாக! என பிரார்த்திப்போம்.

விவாஹ ஹோமம் :- ஸப்தபதீ ஆன பிறகு, தம்பதிகள் அக்நியை வலமாக வந்து அக்நியின் மேற்கு புறத்தில் அமர்ந்து பத்நி கணவனைத் தொட கணவன், "ஸோமாய ஜநவிதே ஸ்வாஹா", என்ற மந்திரங்களைச் சொல்லி அக்நியில் ஹோமம் செய்ய வேண்டும். நாங்கள் இன்பமயமான இல்லற வாழ்கை நடத்த வேண்டும். எங்கள் வாழ்க்கையில் செல்வம் நிறைந்து பெருக வேண்டும். மனைவி புகுந்த வீட்டிலேயே முழுப் பற்றுதலோடு உள்ளவளாக இருக்கவேண்டும். ஆரோக்கியத்துடன் கூடிய நீண்ட வாழ்வும் புத்ர ஸம்பத்தும் எங்களுக்கு அருளப்பட வேண்டும் என்று இந்த ஹோமத்தில் வேண்டிக் கொள்கிறார்கள்.

**லாஜ ஹோமம்:**

அக்நிக்கு மேற்குபுறம் தம்பதிகள் அமர்ந்து புருஷன் மனைவியின் இரு கைகளையும் ஒன்று சேர்த்து நெய்யினால் சுத்தி செய்து கன்னிகையின் உடன்பிறந்தவன் அவளது கைகளில் பொரியை நிரப்பவும், அதன் மேல் கணவன் நெய்யினால் அபிகாரம் செய்து 'இயம் நாரீ' என்ற மந்திரத்தை சொல்லி அவளது கையிலுள்ள பொரியால் அக்னியில் ஆஹுதி செய்கிறான். இக்கன்னிகை தங்களைப் பிரார்த்திக்கின்றாள் என்று அக்னியிடம் தெரிவிப்பதாக இம்மந்திரம் அமைந்துள்ளது. மேலும் இவர்களால் செய்யப்படும் இருமந்திரங்கள் கூறுவதாவது:- எனது கணவன் நூறு ஆண்டுகள் வாழ்ந்து என்னை ஸௌமங்கலத்துடன் இருக்கச் செய்ய வேண்டும். எனது பிறந்த வீட்டில் எனக்குள்ள பற்றுதல்கள் விடுவிக்கப்பட வேண்டும். கணவனது வீட்டிலேயே எனது மனம் பதிந்து பிடிப்புள்ளதாக அமைய வேண்டும். கணவன் மனைவியாகிய நாங்கள் ஒத்த மனமுடையவர்களாக வாழ வேண்டும் என்பதாகும். இத்துடன் ஹோமம் பூர்த்தியாகிறது.

**ப்ரவிச்ய ஹோமம்:**

கணவனும் மனைவியும் வீட்டில் பிரவேசித்தவுடன் இந்த ஹோமம் செய்யப்படுகிறது. "ஆகந்கோஷ்டம்", எனத் தொடங்கும் மந்திரங்கள் சொல்லப்படுகின்றன.  அதன் கருத்து:- இப்பொழுது நிறைய ஸ்த்ரீ தனத்துடன் எங்கள் வீட்டிற்கு வந்துள்ள எனது பத்னி நல்ல குழந்தைகளைப் பெற்று எல்லா பாக்யங்களும் தனங்களும் நிரம்பப் பெற்றவளாக நூறு ஆண்டுகள் ஸுமங்கலியாக வாழ்ந்து எனது ஔபாஸநாக்நியை போஷிப்பவளாக இருக்க வேண்டும். இது அக்னியைக் குறித்த பிராத்தனை.  பிறகு வந்துள்ள ஸ்த்ரீ ஜனங்களை கேட்டுக் கொள்கிறான். எனது மனைவியை குளிர்ந்த பார்வையால் பார்த்து வாழ்த்திவிட்டுச் செல்லுங்கள் என்று. "ஸுமங்கலீரியம் வதூரிமாகும் ஸமேத பச்யத| ஸௌபாக்ய மஸ்யை தத்வாயாஸ் தம் விபரேதந||".

**த்ருவ தரிசனம்:**

'ப்ரவிச்ய ஹோமம் ஆன பிறகு நக்ஷத்திரம் உதயமானவுடன் கணவன் மனைவிக்கு ஸப்தரிஷி மண்டலம், அருந்ததி-துருவன் முதலான நக்ஷத்திரங்களைக் காண்பித்து இருவரும் செய்து கொள்ளும் பிரார்த்தனை இது. நீங்கள் எங்களை நீண்ட எல்லா நலன்களும் பொருந்திய இல்லற வாழ்க்கையை பெற்றவர்களாக வாழ்ந்து வர அனுகரஹிக்க வேண்டும். *சேஷ ஹோமம் :-* விவாஹ தினத்திலிருந்து மூன்று தினங்கள் காலை, மாலை ஔபாஸனாதி கர்மாக்களைச் செய்து கொண்டு பிரம்மச்சாரிய விருதமுடையவர்களாக தம்பதிகள் இருக்க வேண்டும். நான்காவது நாள் இரவின் கடைசி பாகத்தில் இந்த சேஷ ஹோமத்தைச் செய்வார்கள். விவாஹத்தை அனுஹரித்த ஸோமன்-கந்தர்வன் முதலிய தேவதைகளைப் பிரார்த்தித்து நன்றி கூறப்படுகிறது. ஹோம முடிவில் அக்னியை நோக்கி பிராத்தனை செய்யப்படுகிறது. எனது மனைவியின்

சரிரத்தில் எவ்வித அவலக்ஷணங்களும் தோன்றக்கூடாது. எங்களுக்கு ஒரு கேடும் வரக்கூடாது. நாங்கள் விரும்பும் எல்லாம் எங்களுக்கு ஸித்திக்க வேண்டும் என்பதாகும். இம்முறைப்படி விவாஹம் செய்வதையே, அந்த காலத்தில் நான்கு நாட்கள் விவாஹம் என்றார்கள். இந்த முறைப்படி விவாஹம் செய்து கொண்ட தம்பதிகள், பிராத்திக்கப்பட்ட தேவதைகளின் அருளால் மூப்பை அடையும் வரை ஸௌபாக்கியங்களுடனும், ஸ்நேகத்துடனும், ஆரோக்யத்துடனும் மங்களமாக வாழ்ந்து வருகிறார்கள் என்பது மரபு.

**************************************************************************